12

# விலங்கினப் பண்புகள் மூலம் சமூக சிந்தனை-திருக்குறள் ஆய்வு

**முனைவர். மாணிக்கம் பவுன்ராஜ்**

**உதவிப் பேராசிரியர், முதுகலை மற்றும் ஆய்வியல் விலங்கியல் துறை,**

**விவேகானந்த கல்லூரி, திருவேடகம் மேற்கு, மதுரை மாவட்டம் – 625 234,**

**E-mail: mpavunraj@gmail.com**

**முன்னுரை**

வள்ளுவன் காலம் மிகப் பழமையான காலம். அக்கால கட்டத்தில் அவர் எழுதிய நூலிலுள்ள சிந்தனைகள் எந்தக் காலத்திலும் பொருந்தக்கூடிய வகையில் இருக்கிறது. இதன் மூலம் மனித எண்ணங்களைக் கவரும் வகையில் குறளில் கூறுபாடுகள் நிறைந்து இருக்கின்றன. அளவு சிறியதாக இருந்த போதும் அதன் ஆற்றல் மிகப்பெரியது என்றுதான் குறளைப் புகழ வேண்டும். விலங்கின் பண்புகள் மூலம் சமூக சிந்தனை பெறுகிறான் மனிதன் என்பதுதான் உண்மை.

**தலைமைப் பண்பு**

விலங்கினங்கள் தங்கள் குழுக்களுக்குத் தலைமைப் பண்பு ஏற்கின்ற பொழுது எப்படி தங்கள் இனத்துடன் சேர்ந்து இருப்பதற்கு நல்ல குண இயல்புடன் இருக்கிறது என்பதை குறளின் வழி உணர முடிகிறது.

**வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்**

**புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று (273)**

எந்த ஒரு விலங்கும் அதன் இயல்பில் நேர்மையுடன் இருக்கும். அது அதன் குணத்தை மாற்றிக் கொள்ளாது. தன் இனத்து குழுவின் நன்மைக்கு உகந்து இருக்கும். விலங்கினங்கள் எந்த ஒரு இடத்திலும் தனது சுயத்தை மாற்றிக் கொள்ளாது. ஆனால் மனிதன் மனதை அடக்கும் வலிமை இல்லாதவன் மனதில் உண்மையான கடவுள் பக்தி இல்லாமல் போலியாக தவ வேடம் பூணுதல் பசு புலித்தோல் போர்த்திக் கொண்டு பயிரை மேய்தல் போன்றதாகும். இப்படி விலங்கினங்கள் கூட அதன் இயல்பில் இருக்கின்ற பொழுது மனிதன் போலி வேடம் கொள்வது இழிதற்குரியது. இப்படி விலங்கு நடத்தை சமூகத்தில் ஒரு அங்கமாக இருக்கும் மனிதனுக்கே பண்பை கற்பிக்கும் வகையில் இருக்கிறது.

விலங்கினத்தில் ஒழுக்கம்

**புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்**

**ஏறுபோல் பீடு நடை (குறள் 59)**

இந்தக் குறளில் ஒழுக்கம் இல்லாதவர்கள் குடும்பத்தில் இருக்கும் பொழுது அதன் காரணமாக ஒழுக்கத்துடன் இருக்கின்றவர்கள். பகைவர் முன்பு பெருமிதமாக நடக்க முடியாது. ஆனால் விலங்கினங்களோ தன் இனத்தில் இருக்கின்றவர்களுக்காக அவசியமான பண்புகளை விட்டுக் கொடுக்காது விலங்கினங்கள் தங்கள் சமூகத்தில் கௌரவத்தையும் வாழ்வாதாரத்தையும் பெற போராடும். சவால்களை நேர்மையாக பிரதிபலிக்கின்றது. இப்படி விலங்கினங்கள் போல் தங்கள் இனத்திற்கு ஏற்ற நற்பண்புகள் இல்லாதவர்கள் தங்களுடைய வலிமையைப் புத்திசாலித்தனத்தை அல்லது சமூக திறன் ஆகியவற்றின்மையால் தங்கள் நிலையைப் பராமரிக்க முடியாது. ஆனால் விலங்கினங்கள் அதற்குரிய நற்பண்புகளை இழக்காமல் அப்பண்புகளைக் காக்க போராடுகின்றன. ஆனால் மனிதனோ சூழ்நிலை காரணமாக தவறு செய்து விட்டேன் என்று கூறுகிறான்.

**விலங்குகளின் நிலைபாடு**

**பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை**

**வெரூஉம் புலிதாக் குறின். (குறள் 599)**

புலி அதன் இயல்பில் இருக்கும். அதை தவறு என்று சொல்ல முடியாது. யானை பெரிய உடம்பையும் கூர்மையான தந்தங்களையும் உடையதானாலும் யானை அதற்குரிய நிலைப்பாட்டில் இருக்கும். எனவே விலங்கினங்கள் கூட அதன் உண்மையான பண்புகளில் இருக்கும். அதனால் வீழ்ச்சி இல்லை. ஆனால் ஆறறிவு படைத்த மனிதன் தன் இயல்பில் இல்லாமல் இருப்பது தான் மிகப்பெரிய கேள்விக்குறியாகிறது. மனிதனை விட அறிவில் குறைவாக இருக்கும் விலங்கினங்கள் கூட தன் இயல்பை இழப்பது இல்லை. எனவே விலங்கினங்களின் நடத்தை சமூக மேம்பாட்டிற்குச் சமூக சிந்தனைக்கு உதவுகிறது என்றே சொல்ல வேண்டும்.

**விலங்கினங்கள் இடன் அறிந்து செயல்படல்**

**நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்**

**நீங்கின் அதனைப் பிற (குறள் 495)**

ஆழமான நீரில் முதலைப் பிற உயிர்களை வெல்லும். அந்நீரிலிருந்து அது நீங்கும். ஆனால்

அதனைப் பிற உயிர்கள் வெல்லும். அது நீரிலிருந்து அவ்வளவு எளிதில் வெளியில் வராது. மனிதர்கள் அந்த முதலையிடம் கற்க வேண்டியது விலங்குகள் கூட அதன் பலத்தைக் காட்ட வேண்டிய இடத்தில் மட்டும் காட்டுகின்றது. ஆனால் மனிதன் எல்லா இடங்களிலும் தன் ஆணவத்தைப் பலத்தைக் காட்ட நினைப்பது வீண் பிரச்சனைகளுக்கும் உயிர் சேதம் ஏற்படுவதற்கும் காரணமாகிறது. எனவே இதன் வழி முதலையின் பண்பை உணர முடிகிறது.

விலங்குகளின் மனவெழுச்சி

**சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பிற்**

**பட்டுப்பா டூன்றுங் களிறு (குறள் 597)**

உடலை மறைக்கும் அளவுக்கு அம்புகள் தைக்க பட்டாலும் யானை தளராமல் தன் பெருமையை நிலை நிறுத்தும். அதுபோல மன எழுச்சி உடையவர்கள் அழிவு வந்துவிட்டதும் தவறாமல் தன் பெருமையை நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்ற ஊக்கமுடைய பண்பை மனிதனுக்கு யானை தனது பண்பின் மூலம் உணர வைத்திருக்கிறது என்றே திருவள்ளுவர் வழி நின்று நாம் உணர வேண்டி இருக்கிறது.

**விலங்குகள் வழி மானம்**

மானத்தின் முக்கியத்துவத்தை இன்னொரு விலங்கான கவரிமானின் பண்பில் இருந்து மனிதன் உணர முடிகிறது. தன் மயிர்திறலில் ஒரு மயிர் நீங்கினாலும் உயிர் வாழாத கவரிமானைப் போன்றவர் தம் மானம் அழியக்கூடிய வகையில் எந்த ஒரு செயலையும் செய்யாமல் இருப்பது தான் சிறப்பு. தன் மானத்தை உயிரினும் மேலாக நினைக்கக்கூடிய மனிதர்கள் தானும் உயர்வார்கள். அவர்கள் மூலம் சமுதாயமும் உயரும் வகையில் இருப்பார்கள்.

**மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்**

**உயிர்நீப்பர் மானம் வரின்.(969)**

**தொகுப்புரை**

விலங்கினங்கள் மனிதனைப் போல் தத்துவார்த்தம் பேசுவதெல்லாம் இல்லை. அது அதனுடைய பண்பை இழக்காமல் வாழ்தலே அதன் மேம்பாட்டிற்கும் சிறப்பாக அமைகிறது. பசு, புலி, யானை முதலை கவரி மான் இவ்வாறு விலங்கினங்களின் நற் செயல்களை அதன் வழி மனிதன் உணர வேண்டிய நல்லெனவற்றைத் திருவள்ளுவர் சிறப்பாகக் கூறியிருக்கிறார். மக்கள் தொடர்ந்து திருக்குறளைப் படித்து மனதில் ஆழப் பதிய வைத்து வருவார்களானால் நம் நாட்டில் மக்கள் வாழ்க்கை சிறப்பு பெறும். மனிதன் மனிதனாக உயர்வடைய கூடிய வகையில் நல்ல சமூக

சிந்தனை சார்ந்த பதிவுகளைப் புரிந்து கொள்ள முற்படுதல் சிறப்பு. திருக்குறளின் ஒவ்வொரு குறளிலும் ஒவ்வொரு கருத்துக்கள் மிளிர்கின்றன. நமக்கு அந்தச் சமயத்தில் எந்தக் கருத்து தேவைப்படுகிறது அதை கற்று உணர்ந்து பயனடைய வேண்டும்.

**நான் கண்ட புதிய முடிவு**

மற்றவர்கள் செய்ய முடியாத செயலையும் சிறந்த முடிவுகளையும் திருக்குறளைக் கற்று உணர்ந்தவர்கள் மிக எளிதில் சிறப்பாக எடுத்து விடுவார்கள். விலங்கினங்களின் சிறந்த பண்புகளை மனிதன் ஏற்றுக் கொள்கின்ற பொழுது அது சமுதாய சிந்தனையாகவும் மாறி சமுதாயம் உயர்வடைவதற்கு வழிவகை செய்துவிடும். எங்கிருந்து எதிலிருந்து கற்க வேண்டும் என்று நினையாமல் நல்லனவைகளை எதிலிருந்தும் பாடமாக எடுத்துக் கொள்ளலாம். இந்த உலகில் பிறந்த எந்த ஒரு உயிரினத்தையும் மனிதன் தாழ்வாக நினைத்தால் மனிதன் அங்கு தாழ்வு நிலை அடைகிறான். இத்தகைய பக்குவ நிலையைத் திருக்குறள் ஆய்வின் வழி உணர முடிகிறது.

**துணை நூல் பட்டியல்**


- க.ப. அறவாணன் திருக்குறள் சிறப்புரை விளக்கம், கருத்து அடைவு, தமிழ்க்கோட்டம், அய்யாவு குடியிருப்பு அமைந்தகரை, சென்னை-600029